**செ.வெ. எண்: 557** **நாள்: 24.09.2012**

## <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை ஃபோர்டு மோட்டார் நிறுவனத்தின் ஆசிய பசிபிக் மற்றும் ஆப்பிரிக்க பகுதிகளின் தலைவர் திரு. ஜோ ஹின்ரிக்ஸ், சென்னையில் உள்ள ஃபோர்டு இந்தியா நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. மைக்கேல் போனஹாம், ஃபோர்டு பிசினஸ் சர்வீசஸ் நிறுவனத்தின் செயல் இயக்குநர் திரு. ஜொகிந்தர் சிங் ஆகியோர் இன்று தலைமைச் செயலகத்தில் சந்தித்தனர்.

1995 ஆம் ஆண்டு ஃபோர்டு நிறுவனம் சென்னையில் தங்கள் தொழிற்சாலையை நிறுவுவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் செய்த உதவிகளையும், அதன்பின் தொடர்ந்து அளித்துவரும் ஆதரவினையும் நன்றியுடன் நினைவுகூர்ந்து, தற்போது சுமார் 5,200 ஊழியர்களை கொண்ட ஃபோர்டு இந்தியா நிறுவனம் மேலும் விரிவுபடுத்தப்பட்டு அடுத்த ஓராண்டுக்குள் சென்னை மற்றும் கோயம்புத்தூர் பகுதிகளில் சுமார் 1,200 பணியாளர்கள் புதிதாக நியமிக்கப்பட உள்ளார்கள் என்பதைத் தெரிவித்தார்கள்.

இதனைத் தொடர்ந்து, அடுத்த ஆண்டு பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் தாங்கள் புதிதாக தயாரித்து அறிமுகப்படுத்தவுள்ள ஸ்போர்ட்ஸ் யுடிலிட்டி வாகனத்தை (Sports Utility Vehicle) துவக்கி வைக்குமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை கேட்டுக் கொண்டனர்.

இந்தச் சந்திப்பின்போது, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், தொழில் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ஆகியோர் உடன் இருந்தனர்.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9
நாள்: 24.9.2012